# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No. பிரிக்கப்பட்ட வழக்கு வரிசை எண்.C.C.20/2008 (அசல் வழக்கு எண்.30/2006 ) |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.8 |
| Name | : | ரங்கநாதன், சிறப்பு உதவி ஆய்வாளர், வந்தவாசி தெற்கு காவல் நிலையம். |
| Father’s Name | : | த.பெ.கண்ணன் |
| Village | : | . |
| Taluk | : | . |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | 57 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 11.05.2026.

**1ம் எதிரி அலாவூதின் இறந்துவிட்டார். 2ம் எதிரிக்கு எதிராக வழக்கு நடத்தி முடிக்கப்பட்டது. 3ம் எதிரிக்கு எதிராக பிரிக்கப்பட்ட வழக்கு வரிசை எண்.சி.சி.20/2008 ஆக நிலுவையில் உள்ளது.**

**எதிரி ஆஜர் இல்லை.**

## முதல் விசாரணை

நான் தற்போது வந்தவாசி தெற்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள் ரமேஷ், கோபால் பணி மாறுதலில் சென்றுவிட்டார்கள். அதனால் அவருக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்வு செய்ய இயலவில்லை. நான் தொடர் பணியில் இருப்பதால் அவரது கையெழுத்து எனக்கு தெரியும். நான் கோப்புகள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

1) கடந்த 10.06.2002ம் தேதி அ.சா.3னிடம் புகார் பெற்று நிலை குற்ற எண். 109/2002 இதச பிரிவு 379ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆகும்.

2) சம்பவ சாட்சிகளாக பெருமாள், முருகன், அபிபுல்லா, சபீருல்லா, சதகத்துல்லா, ஜாகீர் உஷேன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3) ஜெயராமன், அரி முன்னிலையில் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவை அ.த.சா.ஆ.5 மற்றும் அ.த.சா.ஆ.6ஆகும்.

4) புலன் விசாரணையின்போது 15.11.2002ம் தேதி எதிரி ரகமத்துல்லாவை கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சாதீக் அப்துல் ராகீம் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் அனுமதிப்பட்ட பகுதி அ.த.ச.ஆ.7 ஆகும்.

6) அதன் அடிப்படையில் 10.06.2002ம் தேதி மாலை 17.30 மணிக்கு விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தாலுக்கா சிறுவாடி கிராமம் ரகமத்துல்லா வீட்டின் பின்புறமிருந்து 6 மோட்டார் சைக்கிள்கள் கைபற்றுதல் மகசரில் கைபற்றப்பட்டுள்ளது. அந்த கைபற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.8. கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் ஏற்கனவே சா.பா.1 முதல் 6 ஆக அ.சா.3ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7) எதிரி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.

8) வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரிமீது 379ன்கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி நான் அல்ல. நான் ஆவணங்களின் அடிப்படையில்தான˚ சாட்சியம˚ அளிக்கிறேன். இவ்வழக்கின˚ புகார்தாரா˚ பெருமாள் (அ.சா.3) இருசக்கர வாகன மெக்கானிக் என்றால் சரிதான். திருடு போனதாக சொல்லப்படும் 6 இருசக்கர வாகனங்களின˚ புகார்தாரா˚ இல்லை என்றால˚ சரிதான். அதேபோல் காணாமல்போனதாக சொல்லப்படும ˚ 6 இருசக்கர வாகனங்களுக்கு அதன் உரிமையாளரிடமிருந்து புகார் ஏதும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. இவ்வழக்கு எதிரிகளிடமிருந்து இவ்வழக்கு சொத்துக்களை கைபற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கைபற்றுதல் மகசரில் 6 இருசக்கர வாகனங்களை எதிரி எடுத்து கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லையென்று சொன்னால் சரியல்ல. எதிரி குற்றமற்றவர் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை.**

இல்லை.

//உண்மை நகல் //

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.
Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.